TNPSC குரூப் 2 / 2A 2026 – தேர்வுத் தேதி, காலிப்பணியிடங்கள், தேர்வு முறை, பாடத்திட்டம்

புதுப்பிக்கப்பட்டது: 05-11-2026 · https://www.shanmugamiasacademy.in/tnpsc-group-2-2a

TNPSC குரூப் 2 / 2A (Combined Civil Services Examination–II) 2026 முதல்நிலைத் தேர்வு (Prelims) **01-11-2026 (ஞாயிறு) காலை 9.30 – 12.30** நடைபெற்றது. அறிவிக்கை எண் 07/2026 (11-08-2026) மற்றும் இணைப்பு 7A/2026 (03-09-2026) அடிப்படையில் மொத்தம் **846 காலிப்பணியிடங்கள்** (Group II – 43, Group IIA – 803).

இந்தப் பக்கம் TNPSC அதிகாரப்பூர்வ அறிவிக்கையிலிருந்து தொகுக்கப்பட்டது; ஒவ்வொரு புதிய அறிவிப்புக்கும் புதுப்பிக்கப்படும். இறுதி முடிவுகளுக்கு tnpsc.gov.in பார்க்கவும்.

முக்கியத் தேதிகள் (Important Dates)

நிகழ்வு	தேதி
அறிவிக்கை (07/2026)	11-08-2026
விண்ணப்பக் கடைசி நாள்	09-09-2026 (இரவு 11.59)
திருத்தச் சாளரம்	13-09-2026 – 15-09-2026
இணைப்பு அறிவிக்கை 7A/2026 (கூடுதல் பணியிடங்கள்)	03-09-2026
ஹால் டிக்கெட்	tnpscexams.in-இல் பதிவிறக்கம் (தபாலில் வராது)
முதல்நிலைத் தேர்வு (Prelims)	**01-11-2026, காலை 9.30 – 12.30**
உத்தேச விடைக்குறிப்பு (Tentative key)	தேர்வுக்குப் பின் 6 வேலை நாட்களுக்குள் tnpsc.gov.in-இல்
முதன்மைத் தேர்வு (Mains)	முதல்நிலை முடிவுடன் அறிவிக்கப்படும்

காலிப்பணியிடங்கள் (Vacancies)

பிரிவு	07/2026	7A/2026 கூடுதல்	மொத்தம்
Group II	41	+2	**43**
Group IIA	780	+23	**803**
மொத்தம்	821	+25	**846**

7A-இல் புதிதாகச் சேர்ந்த பதவிகள்: நன்னடத்தை அலுவலர் (Probation Officer – Group II), தொழில் கூட்டுறவு மேற்பார்வையாளர் & உதவியாளர் (Group IIA).

தேர்வு முறை (Exam Pattern)

இரண்டு நிலைகள் மட்டுமே: பொதுவான முதல்நிலைத் தேர்வு (தகுதிக்கு மட்டும்; மதிப்பெண் இறுதித் தேர்வில் சேராது) + Group II, Group IIA-க்குத் தனித்தனி முதன்மைத் தேர்வு. **நேர்முகத் தேர்வு இல்லை.** இறுதித் தரவரிசை முதன்மைத் தேர்வு Paper II மதிப்பெண் அடிப்படையில்.

முதல்நிலைத் தேர்வு – ஒரே தாள், OMR, 3 மணி, 300 மதிப்பெண், குறைந்தபட்சம் 90 (அனைத்துப் பிரிவினரும்)

பகுதி	தரம்	வினாக்கள்
A. பொது அறிவு (General Studies)	பட்டப்படிப்பு	75
B. திறனறிவு & மனத்திறன் (Aptitude & Mental Ability)	SSLC	25
C. பொதுத் தமிழ் அல்லது பொது ஆங்கிலம்	SSLC	100
மொத்தம்		**200**

முதன்மைத் தேர்வு

	Group II	Group IIA
Paper I	தமிழ்த் தகுதித் தேர்வு – விரிந்துரை, 100 மதிப்பெண், 3 மணி, குறைந்தபட்சம் 40 (தகுதிக்கு மட்டும்)	அதே
Paper II	பொது அறிவு – விரிந்துரை (descriptive), பட்டப்படிப்பு தரம், 300 மதிப்பெண், 3 மணி, குறைந்தபட்சம் 90	கணினி வழித் தேர்வு (CBT), 3 மணி, 300 மதிப்பெண், குறைந்தபட்சம் 90: பொது அறிவு 150 வினா + பொது நுண்ணறிவு & காரணவியல் 50 வினா

முதன்மைத் தேர்வுக்கு ஒவ்வொரு இடஒதுக்கீட்டுப் பிரிவிலும் காலியிடங்களைப் போல 10 மடங்கு (1:10) தேர்வர்கள் அழைக்கப்படுவர். Paper I-இல் குறைந்தபட்ச மதிப்பெண் பெற்றால் மட்டுமே Paper II திருத்தப்படும். பொது அறிவு வினாக்கள் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் இருக்கும்.

முதல்நிலைப் பாடத்திட்டம் – அலகு வாரியாக (Syllabus)

திருத்தப்பட்ட பாடத்திட்டம் (12-12-2024). வினா எண்ணிக்கை TNPSC கூறியபடி உத்தேசமானது; சிறிது மாறலாம்.

அலகு	பகுதி	உத்தேச வினாக்கள்
I	பொது அறிவியல் (General Science)	5
II	புவியியல் (Geography)	5
III	இந்திய வரலாறு, பண்பாடு, இந்திய தேசிய இயக்கம்	10
IV	இந்திய அரசியலமைப்பு (Indian Polity)	15
V	இந்தியப் பொருளாதாரம், தமிழ்நாட்டின் வளர்ச்சி நிர்வாகம்	20
VI	தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு, மரபு, சமூக–அரசியல் இயக்கங்கள்	20
–	திறனறிவு (15) + காரணவியல் (10)	25

பொதுத் தமிழ் – பகுதி	உத்தேச வினாக்கள்
இலக்கணம்	25
சொல்லகராதி	15
எழுதும் திறன்	15
கலைச் சொற்கள்	10
வாசித்தல் – புரிந்துகொள்ளும் திறன்	15
எளிய மொழிபெயர்ப்பு	5
இலக்கியம், தமிழ் அறிஞர்களும் தமிழ்த்தொண்டும்	15

கட்டணம், தகுதி

- முதல்நிலைத் தேர்வுக் கட்டணம் ₹100; முதன்மைத் தேர்வுக் கட்டணம் ₹150 (Group II, IIA இரண்டுக்கும் தேர்வானால் ₹300). தகுதியான சிறப்புப் பிரிவினருக்கு விலக்கு உண்டு.
- வயது வரம்பு 01-07-2026 அன்று கணக்கிடப்படுகிறது; பதவிக்குப் பதவி வேறுபடும் (சில பதவிகளுக்கு அதிகபட்ச வயது வரம்பு இல்லை – அதாவது 60 வயது நிறைவடையாமல் இருக்க வேண்டும்). உங்கள் பதவிக்கான வரம்பை அறிவிக்கையில் பார்க்கவும். *(குறிப்பு 05-11-2026: அரசாணை (நிலை) எண் 68, மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, நாள் 30-10-2026 மூலம் அனைத்துப் பிரிவினருக்கும் வயது உச்ச வரம்பு 5 ஆண்டுகள் உயர்த்தப்பட்டுள்ளது – முதலில் குரூப் 4 அறிவிக்கை 11/2026-க்குப் பொருந்தியது. குரூப் 2 / 2A 2026 அறிவிக்கை (07/2026) விண்ணப்பம் ஏற்கனவே முடிந்துவிட்டதால் அதன் வயது வரம்பு அறிவிக்கையில் உள்ளபடியே; அடுத்த அறிவிக்கைகளில் வயது அட்டவணையைச் சரிபார்க்கவும்.)*
- பெரும்பாலான பதவிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம்; சில பதவிகளுக்குச் சிறப்புப் பட்டம் தேவை (எ.கா. நன்னடத்தை அலுவலர்).

- தமிழ் வழியில் படித்தோருக்கான முன்னுரிமை (PSTM) 2010 சட்டம், 2026 திருத்தச் சட்டம் எண் 12-இன்படி பொருந்தும்.

உத்தேச விடைக்குறிப்பு (Answer Key)

எங்கள் ஆசிரியர்கள் தயாரித்த விடைக்குறிப்பு தேர்வு நாள் (01-11-2026) மாலையே விடைக்குறிப்புப் பக்கத்தில் வெளியிடப்பட்டது. TNPSC-இன் அதிகாரப்பூர்வ உத்தேச விடைக்குறிப்பு 6 வேலை நாட்களுக்குள் வரும்; அதை எதிர்த்து 7 நாட்களுக்குள் இணையவழியில் மட்டும் முறையிடலாம்.

தயாரிப்புக்கு உதவும் எங்கள் இலவசப் பக்கங்கள்

- உங்களுக்கான தனிப் படிப்புத் திட்டம் (இலவசம்)
- குரூப் 2 / 2A முழு வழிகாட்டி (கட்டுரைகள்)
- TNPSC குறிப்புகள் – தமிழ்நாட்டுத் தலைவர்கள் (அலகு VI)
- தினசரி நடப்பு நிகழ்வுகள்
- இலவச வினாடி வினா
- பொதுத் தமிழ் PYQ புத்தகம் (3,867 வினா, ₹149) · தமிழ்நாடு நிர்வாகம் PYQ (601 வினா, ₹149)

Shanmugam IAS Academy – அடுத்த படி

- **வகுப்புகள்:** TNPSC குரூப் 1, 2 / 2A (Prelims + Mains), குரூப் 4, UPSC / IAS, வங்கி, SSC, SI – கோவை · மதுரை · ஆன்லைன் – https://www.shanmugamiasacademy.in/fees
- **நூல்கள் (PDF):** TNPSC PYQ நூல்கள், பொதுத் தமிழ் முழுமையான நூல், UPSC நூல்கள் – https://www.shanmugamiasacademy.in/study-materials
- **மேலும் இலவச PDF:** https://www.shanmugamiasacademy.in/free-pdf-download · இந்தப் பக்கம்: https://www.shanmugamiasacademy.in/tnpsc-group-2-2a

சேர்க்கைக்கு அழைக்க / WhatsApp: 99941 46662 · 99944 27714 · www.shanmugamiasacademy.in